கே. ஆர். ரர்மசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. அந்த ஆலையில் கரும்பு சக்கை, அதாவது பகாஸ் அதிகம் கிடைக்கிறது. அதைக் கொண்டு காகித தொழிற்சாலையும் அமைக்கலாம்; மேலும் சர்க்கரைக் கழிவைப் பயன்படுத்தி ஸ்பிரிட் தயாரிப்பதற்கான தொழிற்சாலையும் அமைக்கலாம். இங்கு கிடைக்கும் கரும்பு சக்கையை பேப்பர் மில்லுக்கு எடுத்துச் செல்கிறார்கள். எனவே, சிப்காட் தொழிற்பேட்டையைப் போன்ற ஒரு தொழிற்சாலை அமைத்தால், போக்குவரத்துச் செலவை மிச்சப்படுத்துவதோடு, என் பகுதியிலுள்ள படித்த இளைஞர்களுக்கும் வேலை இல்லாத மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, சீர்காழியை மையமாகக் கொண்டு, சிப்காட் தொழிற்பேட்டையை அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடி என்கிற இடத்தில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் TACID என்று சொல்லப்படுகிற அந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒரு தொழிற்பேட்டையை அமைப்பதற்கான ஆய்த்த வேலை நடைபெற்று வருகின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் கோரியபடி சீர்காழியில் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை. உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற அந்தத் தேவைகளை பனங்குடியிலே ஏற்பட இருக்கிற தொழிற்பேட்டையின் மூலம் பூர்த்தி செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 113, டாக்டர் எம். கருப்புசாமி; சமூக நலத்துறை அமைச்சர்.

113--

தொண்டு நிறுவனங்களைக் கவனிக்கக் கண்காணிப்புக் குழு அமைத்தல்.

* ***20522-டாக்டர் எம். கருப்புசாமி:***

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தொண்டு நிறுவனங்களில் சில, வெளிநாடு, இந்திய அரசு, தமிழக அரசு ஆகியவற்றின் உதவிகளைப் பெற்றும்கூட மக்களுக்கு உதவாமல் இருப்பதை அரசு அறியுமா ?

1993 டிசம்பர் 31]

(ஆ) ஆம் எனில், கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசுக்கு அப்படிப்பட்ட தகவல் ஏதும் வரவில்லை.

(ஆ) கண்காணிப்புக் குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டு இருக்கிறது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலன்டரி அசோசியேஷன் என்று சொல்லக்கூடிய இந்தத் தொண்டு நிறுவனங்களில் பல மக்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்துகொண்டு இருந்தாலும்கூட, சில தொண்டு நிறுவனங்கள் மக்களை ஏமாற்றுகின்ற நிலையில் அரசு பணத்தை வீணாகச் செலவழித்துக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, நீலகிரி மாவட்டத்தில், அங்கே டி.டி.சி. மீட்டிங்கில்கூட திரு. எச். எம். ராஜு, எம்.எல்.ஏ. அவர்களும் கூறினார்கள். ஆர்.டி.ஓ. என்று சொல்லக்கூடிய ஒரு நிறுவனம் அங்கே இயங்கி வருகிறது. அதாவது அது ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரா அல்லது ரூரல் டெவலப்மென்ட் ஆபீசரா என்று பொது மக்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படும்போது, அந்தப் பெயரை மாற்ற வேண்டுமெனக்கூட கூறினார்கள். ஆர்.டி.ஓ. என்ற பெயர் பொதுவாக கவர்ன்மென்ட்டைக் குறிக்கிறது. ஆனால், அந்தப் பெயரை வைத்துக்கொண்டு ஒரு வாலன்டரி அசோசியேஷன் செயல்பட்டு வருகிறது. அதில் ஒரு பார்ட்-டைம் ஆக ஆசிரியர்களை நியமிக்கிறோம் என்று கூறி, கோடிக் கணக்கான ரூபாய் மோசடி செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அதைக் கண்காணிக்கும் பொருட்டு . . . (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டு இருப்பது, சில நிறுவனங்கள் அரசாங்க உதவியையும் பெற்றுக்கொண்டு மக்களுக்கு உதவாமல் இருப்பது பற்றிய பிரச்சினை. ஆனால், நீங்கள் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தைச் சொல்லி, (குறுக்கீடு) அந்த நிறுவனம் வேறு; அந்தப் பெயரிலே தவறு இருக்கிறது என்பது போலச் சொல்லிக்கொண்டு இருந்தால், அதுபற்றி அமைச்சரிடம் விளக்கம் இருக்காது. ஜெனரலாக இப்படி இருப்பதெல்லாம் தவிர்க்கப்படுமா என்று கேட்டால் அதற்கு பதில் சொல்லலாம். குறிப்பிட்ட அந்த நிறுவனத்தைப் பற்றியே நீங்கள் பேசுகிறபோது அதைப்பற்றிய பதில் இருக்காது. எனவே அதல்லாமல் மூல வினாவையொட்டி நீங்கள் கேளுங்கள்.

முற்பகல் 10.45

டாக்டர் எம். கருப்புசாமி: அதுபோன்ற நிறுவனங்களை கண்காணிக்கும் பொருட்டு, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரு

கண்காணிப்புக் குழு அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 976 தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. அவை சுயமாகச் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனங்கள். சில தொண்டு நிறுவனங்கள் ஒரு சமயம் முழுத் தொகையை அரசாங்கத்திலிருந்து கிராண்ட்டாகப் பெறுகிறது. சில தொண்டு நிறுவனங்கள் கிராண்ட்டே வாங்காமல் தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மாநில அரசு, மத்திய அரசு, வெளிநாட்டு நிதி உதவிகள் ஆகிய அனைத்தும் கிடைக்கின்றன. மத்திய அரசுக்கு நேரடியாக சமூகநலத்துறை மூலமாகப் பரிந்துரை செய்து இந்த கிராண்ட்டை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை சமூகநலத் துறை செய்கிறது. எங்கேயாவது தொண்டு நிறுவனங்கள் தவறு செய்கிறது என்று சொன்னால், அதை சட்டமன்ற உறுப்பினர்கள் நேரடியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இதை கண்காணிப்பதற்கென்று கண்காணிப்புக் குழு போடப் பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். இதைத்தவிர மத்திய அரசு, மாநில அரசு உதவியைப் பெற்று நடத்தி வருகிற சமூக நல வாரியம் உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அந்த உறுப்பினர்களுக்கு முழு அதிகாரம் இந்தத் தொண்டு நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கு இருக்கிறது. அவர்கள் எல்லா மாவட்டங்களிலிருந்தும் பரவலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதால் அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற சமூகநல வாரியத்தினுடைய உறுப்பினர்கள், சமூகநல வாரியத் தலைவர், சமூகநல வாரியத்தினுடைய அதிகாரிகள் நேரடியாக இந்தத் தொண்டு நிறுவனங்களைக் கண்காணித்து தகவல்களை அவ்வப்போது மாநிலத்திலிருக்கிற சமூகநலத் துறைக்கு அனுப்பி வைக்கிறார்கள். எங்கேயாவது தவறு நடக்கிறபோது மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற நிதியை நிறுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ரேஷன் கடைக்குகூட நாம் கண்காணிப்புக் குழுவைப் போட்டிருக்கிறோம். அதைப்போல ஒவ்வொரு தாலுக்காவில் இருக்கிற அந்த வாலண்டரி அசோசியேஷனைக் கண்காணிக்க பொதுமக்களை அதனுடைய பிரதிநிதிகளாக தாலுக்கா அளவில் அமைத்து, அந்தக் குழு மாதத்திற்கு ஒரு முறை தொண்டு

1993 டிசம்பர் 31]

நிறுவனங்களோடு அமர்ந்து ஒரு மீட்டிங் பேசவும், குறைகளை நிவர்த்தி செய்யவும் தாலுகா அளவில் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாட்டில் இருக்கிற தொண்டு நிறுவனங்கள் சேவை செய்வதில் முதல் இடத்தைப் பெற்று 18 பதக்கங்களை தமிழகம் தொண்டு நிறுவனங்கள் மூலமாகப் பெற்று இருக்கிறது. தொண்டு நிறுவனங்கள் சுயமாக சேவை செய்யக்கூடியவை. அவற்றிற்கு அரசின் மூலமாக கண்காணிப்புக் குழுவை அமைக்க முடியாது. ஆயினும் சமூகநல வாரியம் கொடுக்கிற பணத்தை அவர்கள் ஒழுங்காகச் செலவு செய்கிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு சமூகநல வாரியத்தினுடைய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பணியை செவ்வனே கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தவிர சமூகநலத் துறை ஒரு கண்காணிப்புக் குழுவைப் போட்டிருக்கிறது. இந்தக் குழுக்களைத் தவிர தாலுக்கா அளவில் குழுக்கள் எதுவும் தேவையில்லை. ஏனென்றால் தாலுக்கா அளவில் எல்லாம் தொண்டு நிறுவனங்கள் இல்லை. மாவட்ட அளவில் 5, 6 தொண்டு நிறுவனங்கள் என்கிற அளவில்தான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்களைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழுவை அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொண்டு நிறுவனங்களில் பெரும்பான்மையான தொண்டு நிறுவனங்கள் சீரிய முறையில் பணியாற்றுவதாகவும் சொன்னார்கள். சில தொண்டு நிறுவனங்கள் உண்மையிலே தவறு செய்கின்றன. அந்தக் கண்காணிப்புக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இடம் பெற்றிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி தவறு செய்கிற அந்தத் தொண்டு நிறுவனங்களைப் பற்றி அந்தக் கண்காணிப்புக் குழு தகவல் தருமேயானால் அவர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கிற உதவித் தொகையை ரெக்கவரி செய்ய அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு காப்பகங்கள் கண்காணிப்புச் சட்டம்

1960-ன்கீழ் 1987-ம் வருடமே இந்தக் கண்காணிப்புக் குழு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னேன். அதிகாரிகளும் இடம் பெற்று இருக்கிறார்கள். வாரிய உறுப்பினர்களும் இடம் பெற்று இருக்கிறார்கள். இவர்கள் அந்தத் தகவலை அரசுக்கு அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு மத்திய அரசு, மாநில அரசு தொகையை உடனடியாக நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகள் அவ்வப்போது செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் நடத்தும் சில தொண்டு நிறுவனங்கள் தமிழக அரசிடமும் சலுகை பெற்றுக்கொள்கிறது. மத்திய அரசிடமும் சலுகை பெற்றுக்கொள்கிறது. இது தவிர, ஃபாரின் எய்டும் வருகிறது. இது தவிர, ஒவ்வொரு குழந்தைக்கும் ஜெர்மனியிலும் கார்டியன் இருப்பார், ஆஸ்திரேலியாவிலும் கார்டியன் இருப்பார்கள். இப்படி வரும் பணங்கள் எல்லாம் கரெக்டாக செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு நமது தமிழக அரசுக்கு உரிமை இருக்கிறதா? இது தவிர, ஒரு சில தனியார் தொண்டு நிறுவனங்கள் நேராக மத்திய அரசிடம் சென்று பல கோடி ரூபாயைப் பெற்று வருகிறார்கள். புராஜக்ட்டைத்தான் காண்பிக்கிறார்கள். அது சரியாக நடக்கிறதா என்று பார்ப்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு தருகிற உதவித் தொகையை மாநில அரசின் மூலமாகத் தருகிறோம். மத்திய அரசிடத்தில் நேரடியாக அவர்களே உதவிகளைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், மத்திய அரசுக்கு, முதலமைச்சருடைய அனுமதியோடு சமூகநலத்துறை ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. அந்தக் கடிதத்தில், இனிமேல் மத்திய அரசு எந்த உதவிகளை, தமிழகத்தினுடைய தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கினாலும், அதை மாநில அரசின் மூலமாகத்தான் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். டெல்லியிலே நடைபெற்ற சமூகநலத்துறை அமைச்சர்களுடைய மாநாட்டிலே இதை தமிழக அரசின் சார்பாக வலியுறுத்தி இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற

1993 டிசம்பர் 31]

உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் சமூகநல வாரியத்தினுடைய உறுப்பினராக இருப்பதால், இந்தக் கோரிக்கையை மத்திய அமைச்சரவையில் வற்புறுத்தி அதற்குரிய உத்தரவைப் பெற்றுத் தருவார்களானால், இனிமேல் மத்திய அரசின் வழியாக பணம் வருகிறபோது, அதை மாநில அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நோக்கத்திற்காகத் தொண்டு நிறுவனங்கள் துவங்கப்பட்டு, அரசின் அங்கீகாரம் பெற்றதோ, அந்த நோக்கத்தோடு செயல்படுகிறதா, அரசின் மூலம் பெற்ற சலுகைகள் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஒவ்வொரு ஆண்டும் சமூகநலத்துறை ஆய்வு செய்து, தகுதிச் சான்றிதழ்கள் வழங்கினால்தான் மீண்டும் அரசின் சலுகைகளைப் பெற தொண்டு நிறுவனங்கள் தகுதி உடையவை என்று அரசு உத்திரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தொண்டு நிறுவனங்கள் சுயமாகவே நடைபெற்று வருகின்றன. சில தொண்டு நிறுவனங்கள்தான் அரசினுடைய உதவியை எதிர்பார்த்து தமிழகத்திலே சேவை நிறுவனங்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படி மாநில அரசினுடைய உதவிகளை, மத்திய அரசினுடைய உதவிகளைப் பெறுகிற தொண்டு நிறுவனங்களை அரசே ஆய்ந்து பார்த்துதான் அவர்களுக்கு நிதி உதவி கொடுக்கிறது. அது தவறான வகையில் செலவிடப்படும் என்று சொன்னால், உரிய நடவடிக்கையை சமூகநலத்துறையும், சமூகநல வாரியமும் எடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

114–

தமிழ்நாட்டில் வீடியோ தியேட்டர்களுக்கு உரிமம் வழங்குதல்.

10171*–திரு. எஸ். எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--